காலாண்டுத்தேர்வு-2024

தமிழ்

சரியான விடையை தேர்ந்தெடு

1.இ) தொல்காப்பியம்

2இ)காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

3)அ)ஏப்ரல் 22

4)அ) மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரர்

5.ஈ)கிழக்கு வாசல் உதயம்

6.ஆ)உயர்திணை அஃறிணை

7.ஆ)மணல் அள்ளுதல்

8.இ)பதிற்றுப்பத்து

9.இ)கிராம நிர்வாக அலுவலர்

10.இ)இராமன் சுக்ரீவன்

11.இ)உற்ற காலத்தில் செய்து உதவி

12.ஈ)கூற்று சரி காரணம் சரி

13.இ) நாய்

14.இ)2413

**15.** செந்நிறத்து வானம் போல் சிவந்த கைகள் உடைய உழைக்கும் தொழிலாளர்களின் திரண்ட தோள் வீற்றிருக்கும் வியர்வை முத்துகளைப் பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார் சிற்பி

16,கவிஞரின் கவிதை சார்ந்த எண்ணம், அதனை வெளிப்படுத்தும் வண்ணம் எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் வாசகனின் மனநிலை..

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

17.கலைத்தொழிலில் இருக்கும் வல்லவர்களுக்கு இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் உணவு தவறாமல் கிடைக்கும்.

18.கலிவிழா - எழுச்சிமிக்க விழா.

ஒலிவிழா - ஆராவார விழா.

19 நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள்
20.**புக்கில்**
தற்காலிகத் தங்குமிடம்

**தன்மனை**
திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் தனியாக வாழுமிடம '

21.நடுவண் அரசு,2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

**22**.திணை, பால், எண், இடம்.
23. ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக

அ)விம்முகின்ற=விம்மு+கின்று+அ

விம்மு-பகுதி;கின்று-நிகழ்கால இடைநிலை

அ-பெயரெச்ச விகுதி.

ஆ)வைத்து=வை+த்+த்+உ

வை-பகுதி;த்-சந்தி;த்-இறந்தகால இடைநிலை

உ-வினையெச்ச விகுதி.

24. ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் பிரித்து புணர்ச்சி தருக

அ)எத்திசை- எ+திசை;இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.

www.Padasalai.Net

ஆ)பூம்பாவை-பூ+பாவை; பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்

25) அ) அறிவும் புகழும்- எண்ணும்மை ;ஆ)மாதவம்- உரிச்சொல் தொடர்

26.அ) வருகை ;புறப்பாடு ;வானூர்தி கிளம்புதல்; கடவுச்சீட்டு

27) அலை கடலில் அளை(நண்டு)களை பிடிக்க அமுதன் அழைத்தான்

28.. இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை

29. பலகை- பலகையால் ஆன மேசையில் உணவு உண்டோம்.

பல கை- பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியை தமதாக்கின.

30. அன்றைக்கு அவனுக்கு பணம் கொடுத்து உதவி இருக்க வேண்டியதுதானே.

**31.<u>இடம்</u>**

தண்டியலங்காரம். இதன் ஆசிரியர் தண்டி ஆவார்

**<u>பொருள்</u>**

மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்கும் தமிழே உனக்கு நிகர் இல்லை என்கிறார்.

கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகின் புற இருளைப் போக்கும் கதிரவன்

32. **<u>குகன்</u>**

இராமன் காட்டிற்கு சென்று துன்புறுவான் என்று குகன் வருந்துவான் என்பதை உணர்ந்த இராமன் இதுவரை நாங்கள் நால்வர். இப்போது உன்னையும் சேர்த்து ஐவர்" என்று குறிப்பிடுகிறார்.

**<u>சுக்ரீவன்</u>**

- சுக்ரீவன் இராமன் மீது கொண்ட அளவற்ற அன்பினால் சீதையை தேடி இலங்கை சென்றான்
- இராமன் மீது அவன் கொண்டிருந்த அன்பைக் கண்ட இராமன் நீ, என் இனிய உயிர் நண்பன் என்று கூறி,
- உன்னையும் இணைத்து ஆறுபேர் ஆனோம் என்றான்.

www.Padasalai.Net

**வீடணன்**

- சீதையை கவரந்து வந்த செயல் தவறு என்று கூறியதற்காக இராவணனை வீடணன் கடிந்தான்.
- இலங்கையை விட்டு வந்த வீடணன் இராமனிடம் அடைக்கலம் வேண்டினான்.
- குகனுடன் ஐவர், சூரியனின் மகன் சுக்கிரீவன் உடன் ஆறுபேர் உன்னையும் சேர்த்து எழுவர் ஆனோம்

33.எனக்கு ஒரு நெறிப்பட்ட மனதுடன் உன் மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும். உள்ளத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றும் பேசும் வஞ்சகர் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்.

- மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும். பெண்ணாசையை என் மனம் துறக்க வேணடும். என்றும் உன்னை மறவாதிருக்கு வேண்டும்.

34 தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.
உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவை விட மிகப் பெரியதாகும்.
இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலை விடப் பெரிதாகும்.
ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்

36.சங்க காலத்தில் முதல்நிலை உறவை மட்டுமே காண முடிகிறது.
நற்றாய் ஒருபுறம் செவிலியும், மகளின் தோழியும் குடும்பத்தில் முதன்மைப் பெற்றனர்.
இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் மக்களோடு நிறைந்து, அறம் செய்து, சுற்றத்தாரோடு சேர்ந்து வாழ்தலே தலைவன் தலைவின் இல்லப் பயன் ஆகும்.

சங்கச் சமூகம் குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாக கொண்டு அதன் தொடர்ச்சியாக இன்றைய சமூகமும் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் கொண்டதாக தந்தை வழிக் குடும்ப் அமைப்பைக் கொண்டதாகவும் அமைகிறது.

37.கற்றலில் பின்தங்கிய மாணாக்கர் கற்றிலில் இடர்படுவதற்கான காரணத்தை இனங்கண்டு அவன் முழுமையான அடைவு எய்த நல்ல வழிகாட்டியாகச் செயல்படுவேன்.
எல்லா மாணாக்கரையும் அன்புடன் அணுகும் மனத்தைப் பெறுவேன்.
தகாத வாரத்த்தைகள், பொருத்தமற்ற வார்த்தைகளை ஒருபோதும் வகுப்பறையில் உச்சரிக்க மாட்டேன்.
மாணக்கர்களின் குடும்பச்சூழல்களை உணர்ந்து அவர்களுக்கு ஆறுதலான் வார்த்தைகளைக் கூறுவேன்.
.
38.இந்திய சாரசனிக் கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்ட கட்டடங்கள் இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றுகின்றன.
ஆவணங்களை முறையாகக் கையாளும் ஆவணக் காப்பகம் (மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ்) சாரசனிக் கட்டட முறையில் அமைந்தது.
எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம்.
இந்தியாவின் பொதுநூலகம் கன்னிமாரா நூலகம்

**39.அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது** - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

இக்குறட்பாவில் பயின்று நிரல்நிரை அணியாகும்.

- *அணி இலக்கணம்*
- ஒரு செய்யுளின் முதலில் சொல்லையும் பொருளையும் வரிசையாக (நிரலாக) நிறுத்தி அவ்வரிசைப்படியே பொருள் கொள்ளும் முறையாகும். .

- *பொருள்*
- இல்வாழ்க்கையில் நாம் அன்பும் அறனும் கொண்டு ஒழுகினால், அதுவே நமக்கு வாழ்க்கையின் பண்பினையும், பயனையும் முழுமையாகத் தரும்.

- *அணிப்பொருத்தம்*
- இக்குறட்பாவில் அன்பு, அறன் என்ற சொற்களை முதலில் ஒரு வரிசையில் நிறத்திய திருவள்ளுவர் அவற்றோடு தொடர்புடைய பண்பு, பயன் என்பவற்றை முறையே அடுத்த வரிசையில் இணைத்து பொருள் கொள்ளுமாறு அமைத்துள்ளார்

(அல்லது)

பொருள் வேற்றுமை அணியின் சான்றுடன் விளக்குக

- அணி விளக்கம்
- இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

- சான்று
- ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்

- அணி பொருத்தம்
- தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று .

- கதிரவன் புற இருளை அகற்றும்;தமிழ்மொழி அக இருளை அகற்றும்

40.**மையக்கருத்து**

மனிதனுக்கு பிறப்பால் புகழ் வராது. சிறப்பான பகழ் வரவேண்டுமெனில் நல்ல செயல்கள் செய்ய வேண்டும்.

**மோனை**

முதலெழுத்து ஒன்றி வருவது மோனையாகும்; நன்மை - நாடும்,

**எதுகை**

இரண்டாம் **எழுத்து** ஒன்றி வருவது;நன்மை - தின்மை,

**இயைபு**

இறுதி எழுத்தோ, ஓசையோ ஒன்றி வரத்தொடுப்பது இயையு

வாராதப்பா - வேண்டுமப்பா, மேற்குலத்தார் - ஒண்ணாதார்

**அணி நயம்:-** இயல்பு நவிற்சி அணி

41. 1.**புதிய மொழி புதிய வாழ்க்கை**

2.**மக்கள் உன்னை புரிந்து கொள்ள வேண்டும் என்றால் அவர்கள் மொழியில் பேசு**

3.**அறிவே உலகை ஆள்கிறது**

4.**வாளின் முனையை விட பேனாவின் முனை கூர்மையானது**

42. **திணை விளக்கம்**

பாடண் திணை என்பது பாடப்படும் ஆண்மகனின் புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**சான்று விளக்கம்**

- வாயிலோயே எனத் தொடங்கும் பாடல்.

**பொருத்தம்**

தன்னை நாடி வருவோர்க்கு இல்லை என்று சொல்லாது அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்தன்மை வெளிப்படுவதால் இப்பாடல் பாடாண் திணை.

www.Padasalai.Net

(அல்லது)

பரிசில் துறை

துறை விளக்கம்

பரிசு வேண்டி வாயிலில் நிற்பது.

சான்று:

வாயி லோயே! வாயி லோயே!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்

பொருத்தம்:

தன்னை நாடி வருவோர்க்கு இல்லை என்று சொல்லாது எப்போதும் திறந்திடும் வாயிலை உடையது அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்தன்மை வெளிப்படுகிறது..

43.பொருத்தமான விடை குறிப்பு இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்

விடை எண்:44.,45,46 க்கு பொருத்தமான விடை குறிப்புகள் இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்

47.அ) விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல் வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண் வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

ஆ) மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்

www.Padasalai.Net